**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 7 இன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் போது நடைமுறை வேலைக்காக காசாக செலுத்துதல் ரூபா 113,559,640 காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், 2022 ஆம் ஆண்டின் போது காசாக செலுத்தப்பட்ட பணிக் கொடை கொடுப்பனவு பெறுமதி ரூபா 11,625,870 செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்க வேண்டியிருந்த போதிலும், ரூபா 1,995,790 தொகை குறைத்து ரூபா 9,630,080 மாத்திரம் காசு வெளிப்பாய்ச்சலாக குறிப்பிடப்பட்டிருந்தது. | நடைமுறை வேலைக்காக கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 11,982,547 காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளாக தனியாக காண்பிப்பதற்கு இணங்குவதுடன் அதற்காக பணம் பெற்று திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்து காண்பிப்பதற்கும் எதிர்காலத்தின் போது நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். பணிக்கொடை பெறுமதி 2023 சனவரி 03 ஆம் திகதி ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களுக்காக செலுத்த வேண்டிய பணிக்கொடை பெறுமதியாக இருந்ததுடன், அது குறிப்பு இலக்கம் 24 இல் செலுத்த வேண்டிய செலவினங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கி இருத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 12 இன் பிரகாரம் வரி கணிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2022 இன் 45 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பந்தி இலக்கம் 33(3) இன் பிரகாரம் முதல் 06 மாதங்களுக்காக 24 சதவீதமும், இரண்டாவது 06 மாதங்களுக்காக 30 சதவீதமும் வரி விகிதமாக கவனத்தில் கொள்ளப்பட்டு கணிப்பீடு செய்ய வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும், மொத்த காலப் பகுதிக்காகவும் வரி விகிதம் 24 சதவீதம் ஈடுபடுத்தி வருமான வரி கணிப்பிடப்பட்டதன் காரணமாக வரிச் செலவினம் ரூபா 11,833,776 இனால் குறைவாக | அதிகார சபையின் வருமான வரி செலுத்துகின்ற மதிப்பீட்டு ஆண்டு 2022 சனவரி 01 ஆம் திகதியில் ஆரம்பிப்பதனால் மொத்த வருடத்திற்கும் 24 சதவீதத்தின் அடிப்படையில் வரி கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 2022 இன் 45 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 33(3)(ii)(இ) இன் பிரகாரம் எதிர்காலத்தில் பரிந்துரை செய்த கொடுப்பனவுகளை மேற்கொண்டு குறை வரி ஒதுக்கீடுகளை கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கி இருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணிப்பீடு செய்ய்பபட்டிருந்தது, மேலும், மேற்கூறப்பட் பிரகாரம் வேறுபாடான வரி விகிதம் ஈடுபடுத்தியதன் காரணமாக பிற்போட்ட வரி பொறுப்புக்கள் ரூபா 6,649,335 குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் 120 ஆம் பந்தியின் பிரகாரம் பணிக் கொடை தொடர்பாக சகல சேவைச் செலவினங்களும் மாதிரிப் படிவத்தின் படி விரிவான வருமானக் கூற்றில் அறிக்கையிட வேண்டிய போதிலும், பணிக் கொடை ஒதுக்கீடுகள் கணிப்பீடு செய்யும் போது ஆண்டிற்குரிய பணிக் கொடை செலவினப் பெறுமதி ரூபா 1,930,028 மற்றும் வட்டி செலவினமான ரூபா 5,444,646 இனை உள்ளடக்கி மொத்த கூட்டுத்தொகை ரூபா 7,374,674 செலவினமாகவும், மற்றும் ஆயட்கால இலாபம் ரூபா 7,361,043 தொகை ஏனைய விரிவான வருமானமாகவும் குறிப்பிடப்படாமல் தேறிய விளைவாக ரூபா 13,631 பணிக் கொடை செலவினமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது, | மீளாய்வாண்டில் ரூபா 7,374,674 தொகை மொத்த பணிக் கொடை செலவினம் தொடர்பான தகவல்கள் 2022 இன் கணக்கு கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 22 இன் கீழ் விபரங்களுடன் காண்பிக்கப்பட்டுள்ளது. ரூபா 7,361,043 ஆன ஆயுட்கால இலாபம் கணக்காய்வில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் விரிவான வருமானக் கூற்றின் கீழ் காண்பிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்து. இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் 55 ஆம் பிரிவின் பிரகாரம் Difined Benefit Plan Method இன் கீழ் காலப் பகுதியில் ரூபா 13,631 ஆன பணிக்கொடை செலவினம் வருமானக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கி இருத்தல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 37 இன் 10 ஆம் பந்தியின் பிரகாரம் கடந்த கால செயற்பாட்டு விளைவாக ஏற்படக்கூடிய பொறுப்பு (Possible Obligation) தொடர்பாக செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட தொகை நிகழத்தக்க பொறுப்பாக கணக்கீட்டு குறிப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட போதிலும், அந்த நிலைமை கணக்கு குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்படாத இழப்பீடாக | இந்த வழக்கிற்காக செலுத்துவதற்கு எதிர்காலத்தில் நிகழக் கூடும் என எதிர்பார்க்கின்ற ரூபா 7,700,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் குறித்துரைத்த விடயங்கள் தொடர்பாக மாத்திரம் ஒதுக்குதல் மற்றும் கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் இலாபத்தில் இருந்து பதிலழித்தல் | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கி இருத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| செலுத்துவதற்கு ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்ட தொகை ரூபா 7,700,000 மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையின் கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் சொத்துக்களுக்குரிய இழப்பீட்டு நட்டத்தை இனங்காணும் போது அந்த சொத்துக்கள் மீளாய்வு செய்யப்பட்டு அதற்குரிய தனிப்பட்ட ரீதியில் இழப்பீட்டு நட்ட பெறுமதி வருடாந்தம் மதிப்பீடு செய்ய வேண்டிய போதிலும், அவ்வாறு மேற்கொள்ளாமல் ஏனைய சொத்துக்கள், பெறவேண்டியவைகள் மற்றும் வைப்பு மற்றும் முற்பணமாக முறையே ரூபா 200,000 தொகை, ரூபா 1,407,792 மற்றும் ரூபா 1,433,947 ஆக ஒரே வருடத்தில் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் இழப்பீட்டு நட்டமாக கணக்குகளில் சீராக்கப்பட்டிருந்தது. | இழப்பீட்டு நட்டம் தொடர்பாக கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள இழப்பீட்டு நட்டத்திற்குரிய தற்போதைய நிலையினை பரீட்சித்து தேவையான சீராக்கங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | கணக்கீட்டு கொள்கைகளின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சிறிய மற்றும் நடுத்துர அளவிலான இரத்தினக்கல் மற்றும் ஆபரண வியாபாரிகளுக்கு பரிசு வழங்குவதற்காக அதிகார சபையினால் உலக வர்த்தக நிலையத்தில் 02 ஆவது மாடி வாடகைக்கு எடுக்கப்பட்டு அதில் கடைகளை நடாத்திச் செல்வதற்கு 19 வியாபாரிகளுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதில் 03 கடை | இதில் காண்பிக்கப்பட்டுள்ள கடை உரிமையாளர்களின் நிலுவை பணத்தை அறவிடுவதற்கு தற்போது வழங்கு தொடரப்பட்டுள்ளதுடன், சட்ட பிரிவின் அறிவித்தலின் பிரகாரம் அறவிடக் கூடிய தொகை, காலம் தொடர்பாக குறித்துரைத்த நம்பிக்கையுடன் முன்னைய முயற்சிகளுக்கு இணங்காதிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், உலக வர்த்தக | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உரிமையாளர்களிடம் இருந்து 2019 வரை கிடைக்க வேண்டிய ரூபா 2,989,815 நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையத்தில் கடை அறைகளை வாடகைக்கு வழங்கியதால் சகல கடை உரிமையாளர்களிடம் இருந்தும் (சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள கடை உரிமையாளர்களை உள்ளடக்கிய) அறவிட வேண்டிய பணத்திற்கான ஒதுக்கங்கள் 2023 இன் கணக்காண்டில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | அதிகார சபைக்குச் சொந்தமான வெளிநாட்டுப் பணத்தின் மூலம் கொடுக்கல், வாங்கல் மேற்கொள்ளப்படுகின்ற 03 வைப்புக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதியான அ.டொலர் 77,378.05 பெறுமதி அத்திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நாணய மாற்றல் பெறுமதிக்கு (ரூபா 362) பெறுமதி இடாமையின் காரணமாக ரூபா 11,650,248 தொகையால் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் பெறுமதி குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்ற திகதியில் காணப்பட்ட நாணயமாற்ற விகிதத்தின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆண்டின் இறுதியில் நாணயமாற்று விகிதத்தின் பிரகாரம் இறுதி மீதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்த நிறுத்தி வைத்தல் மீதி ரூபா 22,611,038 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 2009 சனவரி 01 ஆம் திகதிக்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 2,568,873 பெறுமதி உள்ளடக்கி இருந்த | 2009 இற்கு முன்னைய ஆண்டுகளில் கணக்குத் தகவல்களைப் பரீட்சித்து ரூபா 2,568,873 ஆன இனங்காணப்படாத 10 சதவீத நிறுத்தி வைத்தல் மீதி தொடர்பான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான பதிவேடுகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் அப் பெறுமதிகளுக்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ஆ) | தோட்டக் கம்பனியொன்றுக்காக செலுத்த வேண்டிய ரூபா 22,306,195 இற்காக அதிகார சபையினால் ரூபா 22,090,642 தொகை நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் அந்தப் பணம் முறையே பல்வேறு கடன் கொடுத்தோரின் கீழ் மற்றும் பல்வேறு வைப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யபபட்டிருந்த போதும் அது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | தோட்டக் கம்பனிக்காக செலுத்த வேண்டிய பணத்திற்காக நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ள ரூபா 22,306,195 தொகைக்கு உரிய தகவல்கள் எதிர்காலத்தில் கணக்காய்வு பிரிவிற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | வெளித்தரப்பினரால் காணிப் பிணக்குகளை தீத்து வைக்குமாறு அதிகார சபையில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 116,136,877 தொகை கிடைத்த வைப்பு மற்றும் முற்பணத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்ட போதும் அது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | காணி நிர்ணயம் தொடர்பாக உரிய பேரேட்டுக் கணக்கான 211613 இன் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆதற்குரிய பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவு பதிவேடுகள் ஒவ்வொரு பிரதேச அலுவலகத்தினாலும் பேணிச் செல்லப்படுகின்றது | -மேற்படி- |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உலக வர்த்தக நிலையத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான இரத்தினக்கல், மற்றும் ஆபரண வியாபாரிகளுக்கு கடைகளை வாடகைக்கு வழங்குவதற்காக அதிகார சபை மற்றும் உலக வர்த்தக நிலையம் கம்பெனி என்பவற்றுக்கிடையில் காணப்பட்ட வாடகை | உலக வர்த்தக நிலையத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண மாற்றல் நிலையத்திற்காக Oversees Reality PLC கம்பனியுடன் ஏற்படுத்தப்பட்டிருந்த வாடகை உடன்படிக்கை 2021 ஒக்டோபர் 31 ஆம் திகதியில் முடிவடைந்திருந்தது. எனினும் ரூபா 16,368,300 பாதுகாப்பு | எதிர்பார்க்கப்பட்ட பாதுகாப்புப் பிணை வைப்பை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| உடன்படிக்கை 2021 ஒக்டோபர் 31 ஆம் திகதியில் முடிவடைந்திருந்தது. அதன் பிரகாரம் அதிகார சபையால் 2004 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலத்தில் வழங்கப்பட்ட பாதுகாப்பு வைப்பு ரூபா 16,368,300 கணக்காய்வு திகதி வரையிலும் 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | வைப்பை விடுவிப்பதற்கு ஏற்படுமாயின் சகல கடைகளையும் தீர்த்தல் உரித்து இந்த நிறுவனத்திற்கு வழங்க வேண்டியதாகக் காணப்பட்டது எனினும் கடை இலக்கம் 30, 36 மற்றும் 47 என்ற கடைகளுக்குரிய கடையுரிமையாளர்களால் அதிகார சபைக்கு 2021 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரையிலும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. இதனிடையே கடையிலக்கம் 36 இற்காக தற்போது சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் நீதிமன்றத்தால் கடைகளை கையளிக்குமாறும் நிலுவைப் பணத்தை செலுத்துமாறும் கட்டளையிடப்பட்ட போதும் கடையுரிமையாளர்களினால் நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் சுற்றறிக்கை இலக்கம் SEC/2020/04 இன் உப இலக்கம் (C)2 இன் படி ஏதாவதொரு மாதத்தில் சேர்க்கப்படுகின்ற நிறுத்தி வைத்தல் வரி அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 நவம்பர் 30 வரை அதிகார சபை இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏல விற்பனையின் போது உரிய ஏல விற்பனைத் தொகையில் அறிவிடப்பட்ட 2.5 சதவீத நிறுத்தி வைத்தல் வரி ரூபா 483,813,173 தொகை 2022 திசெம்பர் 31 ஆம் திகதி | 2.5 சதவீத நிறுத்தி வைத்தல் வரிக்காக கொடுப்பனவு மேற்கொண்டு அதற்குரிய ஆவணங்கள் முழுமைப்படுத்தி வழங்குவதற்கான காலப்பகுதியொன்று எடுக்கின்றமையினால் கொடுப்பனவிற்காக தாமதம் ஏற்பட்டிருந்துத. அதிகார சபையால் 2022 ஆம் ஆண்டில் இதற்காக ரூபா 128.29 மில்லியன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எதிர்காலத்தில் விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வரையிலும் கணக்கீடு வரையிலும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 486 | காசோலைகள் மதிப்பிழக்கின்ற சந்தர்ப்பத்தில் அதற்கான பெறுமதி கூடிய விரைவில் பணமாக அறவிட வேண்டியிருந்த போதிலும் 09 வருடங்கள் கடந்த வருடங்களை விஞ்சிய 02 மதிப்பிழந்த காசோலைகள் பெறுமதியான ரூபா 178,840 இற்காக பணம் அறிவிடப்பட்டிருக்கவில்லை. | 09 வருடங்கள் பழமையானதாக இருந்ததுடன் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான இயலுமை காணப்படவில்லை. ரூபா 178,840 இற்காக மதிப்பிழந்த காசோலைகள் முறையே ரூபா 28,840 தொகை 2010 ஆம் ஆண்டில் காணப்பட்ட இரத்தினக்கல் கண்காட்சிக்காக வியாபாரக் கொட்டகைகளுக்காக கிடைத்த முற்பணமாக இருந்ததுடன் அந்த காசோலை மதிப்பிழந்ததன் காரணமாக அந்த கடைகளை வழங்குதல் மேற்கொள்ளப்படவில் லை. மற்றைய ரூபா 150,000 காசோலை சுற்றிவளைப்பு தொடர்பாக பெறப்பட்ட பணமாக இருந்ததுடன் அந்த காசோலைகள் பெற்ற உத்தியோகத்தர்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் 11 ஆவது பிரிவு | நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் ரூபா 26,890,229 தொகை நிலையான வைப்பாக முதலீடு செய்யப்பட்டிருந்தது. | பொதுத் திறைசேரியிலிருந்து இதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2012 சனவரி 05 ஆம் திகதிய இலக்கம் 01/2012 என்ற அரச நிதி சுற்றறிக்கை | நிர்மாண வேலை ஒப்பந்தங்கள் மாத்திரம் சமூர்த்தி சமூக அடிப்படை அமைப்புக்கள்/ சமூர்த்தி பிரதேச அமைப்புக்களுக்கு கையளிக்க முடியுமாக இருந்த போதிலும் இரத்தினக்கல் செயற்திட்டத்தை மேற்கொள்வதற்கு இந்த சங்கத்திற்கு அதிகாரம் கையளிக்கப்பட்டிருக்கவில் லை. எனினும் அதிகார சபையால் 04 இரத்தினக்கல் செயற்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சமூர்த்தி சமூக அடிப்படை அமைப்புக்களுடன் உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது. | உரிய இரண்டு பிரிவுகளிலும் குறைந்த வருமானம் பெறுகின்ற சகல சமூர்த்தி நலனாளிகளையும் பிரதிநிதித்துவப்படுத்து கின்ற உத்தியோக பூர்வ சங்கமான சமூர்த்தி சமூக அடிப்படையிலான அமைப்பாகும். அதன் பிரகாரம் முன்னர் அமுல்ப்படுத்தப்பட்ட குறைந்த வருமானம் பெறும் செயற்த்திட்டங்களின் பிரகாரம் இந்த சந்தர்ப்பத்தின் போதும் உரிய பிரதேச செயலாளர்களிடமிருந் து உறுதிப்படுத்தல் பெற்று இரு பக்கமும் உத்தியோகபூர்வ சமூர்த்தி சமூக அடிப்படையிலான 07 அமைப்புக்களுக்கு இதன் போது அனுமதி பத்திர தரப்பினராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதியில் இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை | நிதியாண்டு முடிவடைந்ததன் பின்னர் 60 நாட்களுக்குள் ஆண்டறிக்கையின் வரைவுடன் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் நிறுவனத்தால் ஆண்டறிக்கையின் வரைவு நிதிக்கூற்றுத் தொகுதியுடன் | 2022 இன் ஆண்டறிக்கையின் சிங்கள மற்றும் ஆங்கில பிரதிகள் தயார்நிலையில் உள்ளதுடன் தமிழ் மொழி பெயர்ப்புக்காக அனுப்பப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கணக்காய்விற்காக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | வழங்கப்படும். | |
| (உ) | 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை சட்டம் | | | |
| (i) | 14(க) ஆம் பிரிவு | இரத்தினக்கல் கைத்தொழில் மற்றும் ஆபரணக் கைத் தொழிலில் வேலை செய்கின்றவர்களின் சேவை நியதிகள் மற்றும் நிபந்தனைகள் விசேடமாக ஈடுபடுபவர்களின் உயிர் மற்றும் உடல் சரீரங்களுக்கான விபத்துக்களில் பாதுகாப்பதற்காக நடவடிக்கை பாதுகாப்பு நடவடிக்கைகள் முறையாகவும் கட்டுப்படுத்தும் நோக்கிலும் இரத்தினக்கல் கையாளும் அனுமதிப் பத்திரம் விநியோகிக்கும் போது அறவிடப்படுகின்ற தொகையில் ரூபா 500 இரத்தினக்கல் பட்டை தீட்டும் நலன்புரி நிதியத்திற்கு செலவு வைக்கப் படுவதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அந்த நிதியத்தின் மீதி ரூபா 34,807,024 ஆக இருந்ததுடன் இதனை இந்த நிதியத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | அதிகார சபையின் அடிப்படை நோக்கம் இல்லங்களின் விபத்துக்களை குறைப்பதாக இருந்ததுடன் அதற்காக பாதுகாப்பு கைநூலை அறிமுகப்படுத்தல் மற்றும் இல்லத்தார்களுக்கு அறிவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தப்பட்டிருந்ததுடன் இல்லங்களின் விபத்துக்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இந்த நிதியம் குறைவாகப் பயன்படுத்துவதை தவிர்ப்பதற்காக 2020 ஆம் ஆண்டின் போது இல்ல விபத்துக்கள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள நலன்களை கவனத்திற் கொள்ளக்கூடிய மட்டத்தில் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 03 வருடங்களின் போது நலன்களை வழங்குதல் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>ஆண்டு வுழங்கப்பட்ட நலன் | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 2020 1,090,000<br>2021 770,000<br>2022 1,340,000 | |
| (ii) | 15(1) ஆம் பிரிவு | இலங்கையில் இரத்தினக்கல் கைத்தொழிலை நடாத்திச் செல்வதற்கான அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த ஒரேயொரு அதிகாரத்தரப்பினர் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையாக இருந்தமையால் இரத்தினக்கல் கைத்தொழில் விடயத்திற்குரிய பிரதான ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை மூன்றாந் தரப்பினருடன் நேரடியாக இரத்தினக்கல் கையாளல் செயற்திட்டங்களில் ஈடுபடும் சட்டத்திற்கு முரணாக இருந்தமை சட்டமா அதிபர் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அவ்வாறான 04 இரத்தினக்கல் கையாளல் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப் பட்டிருந்தன. | 2019 யூன் 04 ஆந் திகதிய E/17/19NG&JA கடிதத்தின் மூலம் சட்டமா அதிபர் திணைக்களத்தால் வழங்கப்பட்ட பரிந்துரையின் பிரகாரம் அதிகாரசபை நேரடியாக இரத்தினக்கல் கையாளல் செயற்திட்டங்களில் ஈடுபடாதிருந்ததுடன் இரண்டாம் தரப்பினருக்கு இரத்தினக்கல் கையாளல்களுக்கான அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. அதன் போது அதிகார சபையினால் இரண்டாம் மற்றும் மூன்றாம் தரப்பினருடன் உரிய செயற்திட்டத்தை சரியான பிரகாரம் மேற்பார்வை செய்தல் மற்றும் அந்த செயற்திட்டங்களில் கிடைக்கின்ற இரத்தினக்கல்லை அதிகாரசபையின் பொறுப்பில் எடுப்பதற்கும், அந்த இரத்தினக்கற்களை விற்பனை செய்வதால் கிடைக்கின்ற வருமானத்தில் அரச இறைக்காக நிறுத்தி வைத்து மிகுதி பணம் தொடர்புடைய அனுமதிப்பத்திர தாரர்களுக்கு விடுவித்தல் | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தொடர்பாக உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது என்பதை சுட்டிக் காண்பிக்கின்றோம். | |
| (iii) | 15(2) ஆம் பிரிவு | இரத்தினக்கல் பரிசோதனை செய்தல் மற்றும் சான்றிதழ் விநியோகித்தல் களுக்காக நடாத்திச் செல்லப்படுகின்ற தனியார் ஆய்வுகூடங்களை பதிவு செய்வதற்கும் ஒழுங்குபடுத்து வதற்குமான திட்ட முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | இரத்தினக்கல் ஆய்வுகூடத்தை பதிவு செய்வதற்குரிய வர்த்தமானி வரைவு தயாரிக்கப்பட்டு சட்ட வரைவு வழங்கல் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு சட்டரீதியாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக 2022.12.13 ஆம் திகதி விடயப் பொறுப்பு அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | 17(1) ஆம் பிரிவு | எந்தவொரு நபரினாலும் எந்தவொரு இடத்திலும் ஆபரண கைத்தொழிலை நடாத்திச் செல்லும் போது அந்த கைத்தொழில்களை நடாத்திச் செல்கின்ற இடங்கள் அதிகாரசபையில் பதிவு செய்திருக்க வேண்டிய போதிலும் கைத்தொழிலை நடாத்திச் செல்லுகின்ற நபர்கள் பதிவு செய்திருந்தார்களா என்பது தொடர்பாக எந்தவொரு ஒழுங்குபடுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவி ல்லை. | இலக்கம் 1436/21- 2006.03.17 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தங்க அளவை நிர்ணயித்தல் மற்றும் முத்திரை வைத்தல் பிரிவுடன் ஒன்றிணைந்து வட மாகாணம், வட மத்திய மாகாணம், கிழக்கு மாகாணம், தென் மாகாணம், மத்திய மாகாணம் மற்றம் மேல் மாகாணங்கள் தெரிவு செய்து நகரங்களை கேந்திர மயப்படுத்தி 400 ஆபரண கடைகள் அளவில் 2022 ஆம் ஆண்டின் போது அணுசரணையாளரின் அடையாளத்தை முத்திரையிடல் | வருடாந்தம் பதிவு செய்தல் தொடர்பாக கட்டளை தயாரித்து சரியான ஒழுங்குபடுத்தல் முறையொன்று மேற்கொள்ளப் படல் வேண்டும். |

தொடர்பாக அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 328,232,606 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 204,049,942 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 124,182,664 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. காலப்பகுதியின் போது நிர்வாக செலவினம், ஆளணி வேதனங்கள் மற்றும் வருமான வரி செலவினங்கள் ரூபா 174,110,491 இனால் அதிகரித்திருந்த போதும் இரத்தினக்கல் காணி ஏலவிற்பனை மற்றும் ஆபரணங்கள் ஏற்றுமதி சேவைக்கட்டணம், முகவர் அனுமதிப் பத்திரக் கட்டணம் மற்றும் வட்டி வருமானம் என்பன ரூபா 243,601,094 இனால் அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை சட்டம் 1993 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் அதில் காலரீதியில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கூறப்பட்ட விடயங்களுக்கு உரியதாக பணிப்பாளர் சபை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தேவையான அமைச்சரவை குறிப்பு மற்றும் ஏனைய உரிய இணைப்புக்களுடன் திருத்தப்பட்ட 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண சட்டத்தின் வரைவு வன்பொருள் மற்றும் மென்பொருள் பிரதியுடன் 2023.04.12 ஆம் திகதி விடயப் பொறுப்பு அமைச்சிற்கு அனுப்பபப்பட்டுள்ளது. | காலரீதியில் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 510 கிலோ கிராம் நிறை " Rough Sapphire Cluster" இரத்தினக்கல் பாறை 2021 ஒக்டோபர் 27 ஆம் திகதி உரிமையாளரால் தயாரிக்கப்பட்ட பட்டியலின் பிரகாரம் ஐ.அ.டொலர் 10,000,000 தொகையில் அதாவது ரூபா 2,030,600,997 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருநத்து. அது அதிகார சபையின் பணிப்பாளர் மதிப்பீடு/ ரத்ன விஞ்ஞானியினால் விலை நியாயமானதாக சான்று பட்டிருந்ததுடன் பாறை மதிப்பீட்டு சான்றிதழ் பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக சுவிட்சர்லாந்தின் கெப்லின் ஆய்வுகூடத்திற்கு அனுப்பப்பட்டு அந்த இரத்தினக்கல் பாறை 443 நாட்களுக்குப் பின்னர் இந்த நாட்டிற்கு அனுப்பும் போது 2020 மார்ச் 02 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானி பத்திரத்தின் 13.6 ஆம் பந்தியின் பிரகாரம் அறவிட வேண்டிய பட்டியலின் மொத்த கப்பலில் இடப்பட்ட பெறுமதியில் ஒரு சதவீதமான ஐ.அ.டொலர் 10,000,000 * 1 வீதம் = 100,000 இற்கு சமமான ரூபா 37,100,000 தொகை (2023 சனவரி 13 ஆம் திகதியில் உள்ளவாறு ஐ.அ.டொலர் 1= ரூபா 371) அனுமதிப் பத்திர நலனாளியிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | 510 KG நிறை " Rough Sapphire Cluster" இரத்தினக்கல் பாறை 2021.10.27 ஆம் திகதி ஐ.அ டொலர் 10,000,000 தொகை (10 மில்லியன்) அதன் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு சுவிட்சர்லாந்தின் கெப்லின் ஆய்வு கூடத்தின் பரிசோதனைக்காகவும் மற்றும் அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்காகவும் அனுப்பப்பட்டிருநத்து. இந்த உள்ளடக்கம் மீண்டும் 2023.01.13 ஆம் திகதி மீண்டும் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.<br>* இந்த இரத்தினக்கல் பாறை கண்காட்சி ரீதியான, நூதனசாலை பெறுமதிக்குள்ள விடயமாகும்.<br>* இந்த பாறை வெளிநாட்டு சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக ஆனுப்பப்பட்டுள்ளதுடன் அதன் போது பெயரளவுப் பெறுமதியில் குறிப்பிடப்பட்ட காப்புறுதி மேவுகைக்காக இருந்தமை அதன் உரிமையாளரால் அறிக்கையிடப்பட்டிருந்தது.<br>* இந்த இரத்தினக்கல் பாறை சான்றிதழ் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அனுப்பப்பட்ட குறித்துரைத்த காலத்தில் மீண்டும் கொண்டுவரப்படாத போதும் அந்தக் கல்லை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் விற்பனை செய்யப்படாத விடயத்தின் அடிப்படையில் ரூபா 30 மில்லியன் அளவில் சேவைக் கட்டணத்தை அறவிடுவதால் அந்த வியபார நிறுவனம் வீழ்ச்சியடைகின்றமையால் | இரத்தினக்கல் பெறுமதி மதிப்பீடு செய்யும் போது முறையான திட்ட முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பணிப்பாளர் சபை இலக்கம் 2300 இன் கீழ் 2023.04.08 ஆம் திகதி பணிப்பாளர் சபையில் விளக்கம் அறிக்கையிட்டு அனுப்ப வேண்டிய கட்டணத்தை அறவிடாமைக்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்திருந்தது. | |
| (ஆ) | இரத்தினக்கல் அனுமதி பத்திரத்தை விநியோகிக்கும் போது கையேற்கின்ற இரத்தினக்கல் இல்லங்களை மீண்டும் நிரப்பி மறுசீரமைப்பதற்காக சராசரியாக இல்லமொன்றுக்கு ரூபா 4,500 முதல் ரூபா 9,000 பெறுமதியொன்றும் மற்றும் இயந்திர இல்லங்களுக்காக சதுர அடி 3,000 முதல் 40,000 வரையான அளவிற்காக ரூபா 600,000 முதல் ரூபா 5,000,000 ஆக விஷேட பாதுகாப்பு பிணையொன்று இல்லத்தார்களிடம் இருந்து அறவிடப்பட்டிருந்ததுடன், அந்த இல்லங்களை மீண்டும் மறுசீரமைக்கப்பட்ட பின்னர் அந்த பிணை வைப்பு மீண்டும் அறவிடப்படுகின்றது. இந்த முறையில் சேகரிக்கப்பட்ட ரூபா 993,253,918 தொகை சுரங்க அகழ்வுகளினால் மீண்டும் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன், அதன் காரணமாக இந்த இரத்திரனக்கல் அகழ்வு குழிகளை மூடுவதற்குரிய நிலங்கள் சரியானதாக மறுசீரமைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தா என்பது தொடர்பாக கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | அதிகார சபையினால் அனுமதிப் பத்திரம் வழங்கப்படுகின்ற இரத்தினக்கல் அனுமதிப் பத்திரங்களின் நிபந்தனைகளின் பிரகாரம் இல்லங்களின் அனுமதிப் பத்திரம் முடிவடைந்து 02 மாத காலத்தில் உரிய இல்லங்கள் மூடி பிணை கோரிக்கை விடப்படுவதுடன், அவ்வாறு இல்லாத சந்தர்ப்பத்தின் போது பிணை பணம் அரசுடமையாக்கப்படுகின்றமையால் அதிகார சபையின் வருமானத்தில் சேர்க்கப்படுகின்றது. மீளாய்வாண்டில் அரசுடமையாக்கப்பட்ட ரூபா 8,980,350 மில்லியன் பிணைத் தொகையில் அதிக அளவு பாரம்பரிய இல்லம் தொடர்பாக வைக்கப்பட்ட ரூபா 4,500 பிணை பணமாக இருந்ததுடன், அநேகமான சந்தர்ப்பங்களின் போது அனுமதிப் பத்திரத்தால் உரிய இல்லங்கள் மூடி நிலம் மறுசீரமைக்கப்பட்ட போதிலும், இந்த பிணை பணத்தை கோராமையின் காரணமாக இவ்வாறு அரசுடமையாக்கப்பட வேண்டியிருந்தது. கணக்காய்வினால் காண்பிக்கப்பட்ட ரூபா 993 மில்லியன் மீதியில் 90 சதவீதம் அளவில் அமுல்படுத்தப்பட்ட இயந்திர இல்லங்களுக்காக காணப்படுகின்ற பிணை வைப்பாக இருந்ததுடன், இயந்திர சுரங்கம் தொடர்பாக விஷேட பாதுகாப்பு பிணை காணப்படுகின்றமையினால் அநேகமான சந்தர்ப்பங்களில் இல்ல நடவடிக்கைகளின் இறுதியின் போது உரிய இல்லங்களை மூடி நிலத்தை | இரத்தினக்கல் இல்லக் குழிகளை மூடி உரிய நிலத்தை உரியவாறு மறுசீரமைத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அமைத்து பிணை பணம் விடுவிக்கப்படுகின்றது. | |

## 3.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இரத்தினபுரி இரத்தினக்கல் நூதனசாலையை நிர்மாணத்தில் மற்றும் நாளந்தா பூங்காவை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 45 மில்லியன் தொகையான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் ரூபா 250,000 செலுத்தி தரச்சான்றிதழ் அறிக்கையொன்று மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும். மிகுதி வேலை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டமையால் அந்த செலவிடப்பட்ட பணம் பயனற்ற செலவினமாக இருந்தது. | இலங்கையில் இரத்தினகல் தொடர்பான காப்பகமொன்று இல்லாமையினால் இரத்தினகல்லில் அநேகமாக கிடைக்க பிரதேசங்களால் இரத்தினபுரி நகரம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டு தெகுவாவத்தை சர்வதேச இரத்தினகல் மற்றும் ஆபரணங்கள் வர்த்தக நிலையத்தை நிர்மாணிப்பதற்கு ஒப்பாக இந்த சுவடிக் கூடத்தை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆரம்ப எண்ணக்கரு பத்திரத்தில் கொழும்பு தேசிய நூதனசாலை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டிருந்தது. மேலும், இந்த நூதனசாலையை நிர்மாணிப்பதற்கு ஒதுக்கப்பட்ட கட்டிடம் 100 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய தொல்பொருளில் திணைக்களத்திற்கு உரிய பழைய கட்டிடமொன்றாக இருந்தமையினால் CECB நிறுவனத்தில் ரூபா 250,000 செலவில் தரச்சான்றிதழ் அறிக்கை பெறப்பட்டிருந்தது. நிதி அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2002 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தமையின் காரணமாக 2023 ஆம் | பயனற்ற செலவினங்கள் செய்யாதிருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆண்டிற்காக பெறுகைத் திட்டத்தில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. | |
| (ஆ) | திறைசேறியின் அங்கீகாரம் இன்றி ஆரம்பிக்கப்பட்ட இரத்தினகல் பரிசு நிதியத்திற்காக அனுமதியற்ற இரத்தினகல் செயற்பாடுகளின் போது அதிகார சபைக்கு விதிக்கப்பட்ட தண்டப் பணம் மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் மற்றும் இல்லங்கள் ஏலத்தில் விற்பனை செய்யும் போது கிடைக்கின்ற பணம் மற்றும் நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட தண்டப் பணம் செலவு வைக்கப்படுவதுடன், நீதிமன்றத்தில் விதிக்கப்பட்ட தண்டப் பணம் தவிர ஏனைய ஒன்று சேர்க்கப்பட்ட தண்டப் பணங்களில் 35 சதவீதம் சுற்றிவளைப்பு குழுவிற்கும் 5 சதவீதம் சுற்றிவளைக்கின்ற அலுவலகத்திற்கும் 10 சதவீதம் அதிகார சபையின் சகல ஊழியர்களுக்கும் வழங்கி எஞ்சிய 50 சதவீதம் அதிகார சபையின் அதிகாரத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் இந்த நிதியத்தின் மீதி ரூபா 45,226,589 ஆகும். | பரிசு நிதிய கணக்கு தொடர்பாக வருடாந்தம் திறைசேரிக்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்படுகின்றது. நீதிமன்றத்தில் விதிக்கப்பட்ட தண்டப் பணங்களில் உரித்து சமர்ப்பிக்கப்படாத தண்டப் பணங்களுக்குரிய மீதி இந்த நிதியத்தில் முன் கொண்டு செல்லப்படுகின்றது. | திறைசேரி அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கும் நிதியத்தை பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையின் ரூபா 19 மில்லியன் கிரயத்தில் அதிகார சபையின் பயன்பாட்டிற்காக மென்பொருள் முறைமையொன்று ஸ்தாபிப்பதற்கு 2016 ஆம் ஆண்டின் போது மென்பொருள் நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 10,621,000 செலுத்தப்பட்டிருந்தது. அதன் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டத்திற்குரிய பணிகள் மாதிரிகளை உள்ளடக்கி குறித்த கால பகுதியில் பூர்த்தி செய்வதற்குரிய நிறுவனம் தவறியமையின் காரணமாக கால நீடிப்பு மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. அதன் பிரகாரம் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் 2022 யூன் 30 மற்றும் அதன் பின்னர் 2022 செப்டம்பர் 30 வரை சேவை உடன்படிக்கை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. தற்போது உரிய நிறுவனத்துடன், கலந்துரையாடி இந்த செயற்திட்டத்தை பூர்த்தி செய்யும் திகதியை குறித்துரைத்த ரீதியல் காண்பித்து உடன்படிக்கையை திருத்துவதற்கும் செயற்திட்ட காலத்தை மீண்டும் மீண்டும் நீடிக்காமல் இறுதி இணக்கப்பாட்டிற்கு வருவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | பெறுகை பணி நடைமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும். |